**SECOND PRE BOARD EXAMINATION (2019–20)**
**CLASS: X**

**Subject: TAMIL-2L** **Date: 19.01.2020**
Time Allowed: 3 Hours. Maximum Marks: 80

General Instructions:

1. கேள்வித்தாளைப் பொறுமையாகப் படித்துப் பார்த்துப் புரிந்து எழுதவும்.
2. இக்கேள்வித்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது

| | | |
|---|---|---|
| Section: A | Reading comprehension | 15 Marks |
| பிரிவு:அ | படித்தல் | 15 மதிப்பெண் |
| Section: B | Writing | 14 Marks |
| பிரிவு:ஆ | எழுதுதல் | 14 மதிப்பெண் |
| Section: C | Grammar | 15 Marks |
| பிரிவு: இ | இலக்கணம் | 15 மதிப்பெண் |
| Section: D | Literature / Text Books | 36 Marks |
| பிரிவு: ஈ | இலக்கியம் / தமிழ்ப்பாடநூல்கள் | 36 மதிப்பெண் |

3. **அனைத்து** வினாக்களுக்கும் **விடையளிக்கவும்**.
4. எழுதி முடித்தபின் எழுத்துப்பிழை,சொற்பிழைகளைச் சரிபார்க்கவும்.
5. இக்கேள்வித்தாள் **12** பக்கங்களைக் கொண்டது.

**பிரிவு – அ**

**படித்தல் (15 மதிப்பெண்)**

**I. கீழ்வரும் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு விடையளிக்கவும் (5x1=5)**

ஒரு காலகட்டத்தில் கல்வி மொழி தமிழ் நாட்டில் தமிழாகவே இருக்க வேண்டுமென்ற விதி ஏற்பட்டது. உயர்நிலைப் பள்ளிக்கூடங்களில் கல்விமொழி தமிழ்தான் என்ற நிலைக்குரிய சட்டம் பிறப்பித்தார் அன்று கல்வியமைச்சராயிருந்த அவினாசிலிங்கனார்.
“இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்” என்று புதுமைப் பாவலர்கள் முழக்கம் செய்தனர். எங்கு நோக்கினும் இன்பத் தமிழ்; செந்தமிழ்; இதழ்களில் செந்தமிழ்; மேடைப் பேச்சுக்களில் நற்றமிழ்; மாநாடுகளில் வண்டமிழ்; நற்றமிழ் பேசுதலே நற்புலமைக்கு அடையாளம் என்ற எண்ணம் உருப்பெற்று விட்டது. ‘நமஸ்காரம்’ போய் ‘வணக்கம்’ வந்தது. ‘சந்தோஷம்’ மறைந்து ‘மகிழ்ச்சி’ தோன்றியது. ‘விவாஹம்’ விலகித் ‘திருமணம்’ இடம்பெற்றது. ‘வருஷம்’ கழிந்து ‘ஆண்டு’ நிலைபெற்றது. இவ்வாறு தமிழ் மீண்டும் மலரத் தொடங்கியது. இந்த மறுமலர்ச்சிக்கு உறுதுணையாய் இருப்பது ‘தமிழ்நாட்டில் எல்லாம் தமிழில்’ என்ற கொள்கையே. இவ்வாறு நினைப்பது எவர்க்கும் தவறன்று. இ∴து ஒரு புதுமையும் அன்று.

**<u>வினாக்கள்</u>**

1. மேடைப் பேச்சுக்களில் இடம் பெற்றது ---------------
   அ) பிறமொழி கலந்த தமிழ்
   ஆ) தூயதமிழ்
   இ) வடசொல் கலந்த தமிழ்
   ஈ) ஆங்கிலம் கலந்த தமிழ்

2. நற்புலமைக்கு அடையாளம் எது?
   அ) நற்றமிழில் பாடுதல்
   ஆ) நற்றமிழில் பேசுதல்
   இ) நற்றமிழில் எழுது
   ஈ) நற்றமிழில் விவாதித்தல்

3. உறுதுணை என்பதன் பொருள் ---------------
   அ) வாழ்க்கைத்துணை
   ஆ) இன்பத்துணை
   இ) பெருந்துணை
   ஈ) வழித்துணை

4. எது புதுமை ஆகாது?

அ) தமிழ்நாட்டில் எல்லாம் தமிழில் என்ற கொள்கை

ஆ) தமிழ்நாட்டில் தமிழில் எழுதுதல் என்ற கொள்கை

இ) தமிழ்நாட்டில் தமிழில் பேசுதல் என்ற கொள்கை

ஈ) தமிழ்நாட்டில் பிறமொழி கலந்து பேசுதல் என்ற கொள்கை

5. அவினாசிலிங்கனார் வகித்த பதவி -----------------

அ) பிரதமர்

ஆ) முதல்வர்

இ) கல்வியமைச்சர்

ஈ) நீதிபதி

**II. கீழ்வரும் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு விடையளிக்கவும் (5x1=5)**

மனிதர் ஒவ்வொருவரும் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகளும் , செய்ய வேண்டிய கடமைகளும் உள்ளன. பெற்றெடுத்த பிள்ளையைப் பேணி காப்பது தாயின் கடமை. உணவும் , உடையும் , வீடும் , கல்வியும் தந்து வளர்க்க வேண்டியது தந்தையின் கடமை. நல்ல மாணாக்கரை உருவாக்குவது ஆசிரியர் கடமை. கற்க வேண்டிய பாடங்களைக் கற்பதும் கல்வியில் ஊக்கம் காட்டுவதும் மாணவர்கடமை. பெற்றோர்க்கும் , ஆசிரியர்க்கும் , நாட்டுக்கும் , பள்ளிக்கும் மாணவர்கள் கடமைப்பட்டவர்கள். மாணவர் தாம் கல்வி கற்கும் பள்ளியின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு நடக்க வேண்டும். மாணவர் வகுப்பறைகளிலும் , விளையாட்டுத் திடல்களிலும் , பிற இடங்களிலும் அமைதி காக்க வேண்டும். கவிதை , கட்டுரை , சொற்பொழிவு , ஓவியம் , விளையாட்டு முதலிய போட்டிகளில் கலந்து கொண்டு பள்ளிக்குப் பெருமைத் தேடித்தர வேண்டும். அமைதியும் , அடக்கமும் , இன்சொல் பேசுதலும் மாணவர் மீது மதிப்பை உண்டாக்கும்.

வினாக்கள்

1. நல்ல மாணாக்கரை உருவாக்குவது ---------------- கடமை

அ. பெற்றோர்

ஆ. சமுதாயத்தின்

இ. ஆசிரியர்

ஈ நண்பர்களின்

2. மாணவர் பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு பள்ளிக்கு ---------தேடித்தர வேண்டும்.

அ. **பொறாமை**

ஆ. துன்பம்

இ. பெருமை

ஈ. பழி

3. மாணவர் கடமை ---------

அ. கற்க வேண்டிய பாடங்களைக் கற்பது

ஆ. கல்வியில் ஊக்கம் காட்டுதல்

இ. அ,ஆ இரண்டும் சரி

ஈ. எதுவுமில்லை

4. மாணவர் ---------------- உட்பட்டு நடக்க வேண்டும்

அ. பெற்றோருக்கு

ஆ. ஆசிரியருக்கு

இ. நண்பர்களுக்கு

ஈ. பள்ளியின் சட்ட திட்டங்களுக்கு

5. மாணவர் மீது மதிப்பை உண்டாக்குவது எது ?

அ. அமைதி

ஆ. அடக்கம்

இ. **இன்சொல் பேசுதல்**

ஈ. மேற்கூறிய அனைத்தும் சரி

**III. கீழ்வரும் பத்தியைப் படித்து மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி வரைக (1x5=5)**

அரிவட்டி என்பது தமிழ்நாட்டின் கன்னியாகுமரி மாவட்டத்தில் அரிசி வடிக்கப் பயன்படுத்தப்படும் ஒரு பனை ஓலைக் கூடையாகும். இது அரிசி வடிக்கும் பெட்டியாதலால் 'அரிவட்டி' என அழைக்கப்படுகிறது. இது குமரி மாவட்டத்தில் மட்டும் செய்யப்படும் ஒரு பெட்டி வகை ஆகும். பெரும்பாலும் குருத்தோலைகளிலிருந்து பெறப்படும் ஈர்க்கில்களைக் கொண்டு செய்யப்பட்டு வந்தது. குருத்தோலைகள் கிடைப்பது அரிதான தற்காலத்தில் சாரோலை ஈர்க்கில்களைக் கொண்டு செய்யப்படுகிறது. குமரி மாவட்டத்தில் புட்டு (பிட்டு) செய்ய அரிசியைத் தண்ணீரில் ஊறப்போட்டுப் பின்னர் உரலில் இட்டுக் குத்தி மாவைச் சலித்தெடுப்பார்கள். ஊறப்போட்ட அரிசியை வடித்து உலர்த்தி எடுப்பதற்காக அனைத்து வீடுகளிலும் அரிவட்டி தவறாது இடம்பெற்றிருக்கும். திருமண வீடுகளின் அரிசியைக் கழுவி நீர் வடித்து உலையில் போட அரிவட்டியைப் பயன்படுத்துவர்.

## பிரிவு - ஆ
## எழுதுதல் (14 மதிப்பெண்) **(6)**

**IV.**

அ. உங்கள் பள்ளியின் மரம்நடு விழாவிற்கு வருகை தந்துள்ள கல்வித்துறை அமைச்சரை வரவேற்று ஒரு வரவேற்பு மடல் வரைக

அல்லது

ஆ. உங்கள் ஊர்ச்சந்தையில் நடைபெறும் நிகழ்வுகளைப் பற்றிக்கூறி அதைக்காண வருமாறு நண்பனுக்குக் கடிதம் எழுதுக
( இவ்விரு கடிதங்களிலும் உமது முகவரி செல்வன்/செல்வி, 18, காந்தி தெரு, சென்னை - 600025) எனக்கொள்க. )

**V. ஏதேனும் ஒரு பகுதியிலுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக (8)**

அ. தலைப்பு - முன்னுரை - இளமைப் பருவம் - கல்வி - கனவு நனவானது - முதல் பயணம் - கல்பனாவின் ஆர்வம் - இரண்டாம் பயணம் -- முடிவுரை.

ஆ. தலைப்பு - முன்னுரை - தூய்மை இல்லாமை - தூய்மைத் திட்டத்தைச் செயல்படுத்துதல் - நாம் செய்ய வேண்டிய கடமைகள் -- முடிவுரை.

இ. தலைப்பு - முன்னுரை -இராணுவ அமைப்பு - பீல்டுமார்சல் - குறிக்கோள்கள் - முதன்மைக் குறிக்கோள்கள் - இதரக்குறிக்கோள்- முடிவுரை

## பிரிவு – இ
## இலக்கணம் (15 மதிப்பெண்)

**VI. சான்று தருக: (எவையேனும் மூன்று மட்டும்) (3x1=3)**

1. மதுரை சென்றார்
அ. உம்மைத்தொகை
ஆ. இருபெயரொட்டுப் பண்புத்தொகை
இ. வேற்றுமைத்தொகை
ஈ. வினைத்தொகை

2. மருதம்
அ. தோன்றி
ஆ. காந்தள்
இ. செங்கழுநீர்
ஈ. தாழை

3. **பொங்கல் தின்றான்**

அ. தொழிலாகுபெயர்

ஆ. பண்பாகு பெயர்

இ. காலவாகுபெயர்

ஈ. முதலாகுபெயர்

4. **தேமாங்காய்**

அ. வந்தவன்

ஆ. பார்த்ததால்

இ. வாக்குண்டாம்

ஈ. மலரடி

5. வழு

அ. 10

ஆ. 5

இ. 6

ஈ. 7

**VII. நிரப்புக: (எவையேனும் மூன்று மட்டும்) (3x1=3)**

1. ஓரசைச்சீர் ---------- வகைப்படும்

அ. 3

ஆ. 4

இ. 5

ஈ. 8

2. அங்கே வருவது கோபுவா? பாபுவா? என வினவுவது ------

அ. ஏவல் வினா

ஆ. அறியா வினா

இ. மறை வினா

ஈ. ஐய வினா

3. பால் ----------- வகைப்படும்.

அ. 5

ஆ. 4

இ. 7

ஈ. 6

4. எல்லா இடங்களிலும் வளரக்கூடிய தூய வெண்ணிற மலர்களைக் கொண்ட சிறிய செடி -------------

அ. தும்பை

ஆ. வஞ்சி

இ. வெட்சி

ஈ. நொச்சி

5. ஒரு செய்யுளில் பல அடிகளில் சிதறிக்கிடக்கும் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு கூட்டிப் பொருள் கொள்வது -------

அ. நிரல்நிறைப்பொருள்கோள்

ஆ. ஆற்றுநீர்ப் பொருள்கோள்

இ. கொண்டுகூட்டுப் பொருள்கோள்

ஈ. மொழிமாற்றுப் பொருள்கோள்

## VIII. கூறியவாறு செய்க (எவையேனும் மூன்று மட்டும்) (3x1=3)

1. ஒருவர் சொற்பொழிவாற்றுவது போன்றது ( ஓசையைக் கூறுக )

அ. செப்பல்

ஆ. அகவல்

இ. துள்ளல்

ஈ. தூங்கல்

2. வழிப்பறி செய்தல் ( எந்நிலத்தின் தொழில் எனக்கூறுக )

அ. நெய்தல்

ஆ. முல்லை

இ. பாலை

ஈ. குறிஞ்சி

3. தற்குறிப்பேற்றம் (பிரித்து எழுதுக)

அ. தற் + குறிப்பேற்றம்

ஆ. தற்குறிப்பு + பேற்றம்

இ. தன் + குறிப்பேற்றம்

ஈ. தன் + குறிப்பு + ஏற்றம்

4. முதுவேனிற்காலம் (மாதத்தைக் கூறுக)

அ. ஆவணி ,புரட்டாசி

ஆ. ஆனி, ஆடி

இ. மார்கழி , தை

ஈ. மாசி,பங்குனி

5. மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும் (அணியைக் கூறுக )
அ. தன்மையணி
ஆ. வஞ்சப்புகழ்ச்சி அணி
இ. தற்குறிப்பேற்ற அணி
ஈ. தீவக அணி

## IX. இலக்கணக் குறிப்பு தருக (எவையேனும் மூன்று மட்டும்) (3x1=3)

1. அளபெடையின் வகைகள்
அ. 2
ஆ. 3
இ. 4
ஈ. 5

2. அகப்பொருளின் வகைகள்
அ. 5
ஆ. 3
இ. 2
ஈ. 6

3. வினாவின் வகைகள்
அ. 3
ஆ. **5**
இ. 6
ஈ. 7

4. தன்மையணியின் வகைகள்
அ. 2
ஆ. 3
இ. 4
ஈ. 5

5. தழீஇ
அ. இன்னிசையளபெடை
ஆ சொல்லிசையளபெடை
இ. ஒற்றளபெடை
ஈ. செய்யுளிசையளபெடை

**X. சரியான சொற்றொடரைத் தேர்வு செய்க (எவையேனும் மூன்று மட்டும்) (3x1=3)**

1.

அ. அடிதொறும் வான்பொருள்
அற்று அற்று ஒழுகும் அஃது நிரல்நிறைப் புனலே

ஆ. அடிதொறும் வான்பொருள்
அற்று அற்று ஒழுகும் அஃது கொண்டுகூட்டுப் புனலே

இ. அடிதொறும் வான்பொருள்
அற்று அற்று ஒழுகும் அஃது யாற்றுப் புனலே

ஈ. அடிதொறும் வான்பொருள்
அற்று அற்று ஒழுகும் அஃது தாப்பிசை ப் புனலே

2

அ. ஒற்றளபெடையில் பத்து ஒற்றுகள் அளபெடுக்கும்
ஆ. ஒற்றளபெடையில் பதினோரு ஒற்றுகள் அளபெடுக்கும்
இ. ஒற்றளபெடையில் ஆறு ஒற்றுகள் அளபெடுக்கும்
ஈ. ஒற்றளபெடையில் எட்டு ஒற்றுகள் அளபெடுக்கும்

3

அ. முல்லை நிலத்திற்குரிய பறவை கிளி
ஆ. முல்லை நிலத்திற்குரிய பறவை காட்டுக்கோழி
இ. முல்லை நிலத்திற்குரிய பறவை நாரை
ஈ. முல்லை நிலத்திற்குரிய பறவை கடற்காகம்

4

அ. வினைமுற்றுடன் ஒரு பெயர் தொடர்வது வினைமுற்றுத்தொடர்
ஆ. வினைமுற்றுடன் ஒரு பெயர் தொடர்வது வினையெச்சத்தொடர்
இ. வினைமுற்றுடன் ஒரு பெயர் தொடர்வது பெயரெச்சத்தொடர்
ஈ. வினைமுற்றுடன் ஒரு பெயர் தொடர்வது எழுவாய்த்தொடர்

5.

அ. எவ்வகைப்பொருளும் மெய்வகை விளக்கும் சொன்முறை தொடுப்பது தீவகமாகும்
ஆ. எவ்வகைப்பொருளும் மெய்வகை விளக்கும் சொன்முறை தொடுப்பது தன்மையாகும்
இ. எவ்வகைப்பொருளும் மெய்வகை விளக்கும் சொன்முறை தொடுப்பது நிரல்நிறையாகும்
ஈ. எவ்வகைப்பொருளும் மெய்வகை விளக்கும் சொன்முறை தொடுப்பது தற்குறிப்பாகும்

பிரிவு – ஈ

இலக்கியம் / தமிழ்ப் பாடநூல்கள் ( 36 மதிப்பெண்)

**XI. பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்து வினாக்களுக்கேற்ற விடையை எழுதுக (5x1=5)**

தெருக்கூத்தைத் தமிழ்க்கலையின் முக்கிய அடையாளமாக்கியவர். "நாடகக்கலையை மீட்டெடுப்பதே தமது குறிக்கோள்" என்றவர். இவர் தமிழ்நாட்டின் வழிவழி நாடகமுறையான கூத்துக்கலையின் ஒப்பனை முறை, கதை சொல்லும் முறைகளையும் எடுத்துக்கொண்டு புதுவிதமான நாடகங்களை உருவாக்கியவர். அதே வேளையில் நாடகத்தில் பயன்படுத்தும் நேரடி இசைமுறையை அறிமுகம்செய்து இசையிலும் மாற்றங்களை நிகழ்த்தியவர். அவர்தான் கூத்துப்பட்டறை ந.முத்துசாமி என்ற கலைஞாயிறு.

இவரின் நாடகங்கள் பெரும்பாலும் சமூக அரசியல் மாற்றங்களைப் பேசின. இந்தியாவில் மட்டுமன்றி உலகின் பல்வேறு நகரங்களிலும் இவரது நாடகங்கள் நடத்தப்பட்டன. இந்திய அரசின் தாமரைத்திரு விருதையும் தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருதையும் பெற்றார்.

வினாக்கள்

1. கலைஞாயிறு என்பதிலுள்ள ஞாயிறு என்பதன் பொருள் என்ன ?
2. தெருக்கூத்தைத் தமிழ்க்கலையின் முக்கிய அடையாளமாக்கியவர் யார்?
3. அவர் எக்கலையை மீட்டெடுப்பதே தமது குறிக்கோள் என்றார்?
4. அவர் பெற்ற விருதுகள் யாவை?
5. அவரின் நாடகங்கள் பெரும்பாலும் எம்மாற்றங்களைப் பற்றிப் பேசின?

**XII. கீழ்வரும் பாடலைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு விடையளிக்கவும் (4x1=4)**

மையுடையன நெடுவரையே
மருளுடையன இளமான்களே
கயற்குலமே பிறழ்ந்தொழுகும்
கைத்தாயரே கடிந்தொறுப்பார்
இயற்புலவரே பொருள்வைப்பார்
இசைப் பாணரே கூடஞ்செய்வார்
என்று கூறி இவன்காக்கும் திருநாட்டி னியல்இதுவென

வினாக்கள்

1. மேற்கண்ட வரிகள் பயின்று வந்துள்ள நூலின் பெயர் ----------

அ. கூத்தராற்றுப்படை
ஆ. காசிக்காண்டம்
இ. மெய்க்கீர்த்தி
ஈ. ஏர் புதிதா?

2. கயல் என்பதன் பொருள் ---------
அ. யானை
ஆ. குதிரை
இ. மாடு
ஈ. மீன்

3. மேற்கண்ட வரிகள் பயின்று வந்துள்ள நூலின் ஆசிரியர் பெயர் -----------
அ. ஆசிரியர் பெயர் தெரியவில்லை
ஆ. பெருஞ்சித்திரனார்
இ. இளங்கோவடிகள்
ஈ. நப்பூதனார்

4. இப்பாடலில் புகழப்படுபவன் ---------
அ. இராமன்
ஆ. இரண்டாம் இராசராசன்
இ. இரண்டாம் இராசேந்திரன்
ஈ. குலோத்துங்கச்சோழன்

**XIII. கோடிட்ட இடத்தை நிரப்புக (4x ½ =2)**

1. முயற்சி -------------- ஆக்கும் முயற்றின்மை
   இன்மை -------------- விடும்
2. இன்மையின் -------------- தியாதெனின் இன்மையின்
   ---------------- இன்னா தது

**XIV. விடையளி (எவையேனும் இரண்டனுக்குமட்டும்) (2x4=8)**

1. சித்தாளின் மனச்சுமைகள் செங்கற்கள் அறியாது என்பதை நாகூர் ரூமி பாடல் வழி விளக்குக
2. புலவர் இடைக்காடனார் குரலுக்கு இறைவன் செவிசாய்த்த நிகழ்வை விளக்குக
3. பரிபாடல் காட்டும் உயிர்களின் தோற்றத்தை விவரி
4. சங்கத்தமிழரின் வாழ்வு வேளாண்மையையே அடிப்படையாகக் கொண்டது என்பதை ஏர் புதிதா? பாடல் வழி விளக்குக

**XV. விடையளி (எவையேனும் இரண்டனுக்கு மட்டும்)** **(2x5=10)**

1. **ஒரு தாவரத்தின் அடிவகை** , இலை வகை, பிஞ்சு வகையில் காணப்படும் தமிழ்ச்சொல் வளங்களைப் பட்டியலிடுக
2. சமூகப் பண்பாட்டுத்தளத்தின் கருத்துக் கருவூலமாக விளங்குவது நிகழ்கலைகள் என்பதை விளக்குக
3. சங்கஇலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதை உதாரணத்துடன் விளக்குக
4. உயிரினங்களின் முதன்மைத்தேவை காற்றே என்பதை விவரிக்க
5. அல்லில் ஆயினும் விருந்துவரின் உவந்த நம் பழந்தமிழரின் பண்பை விருந்தோம்பல் பாடம் வழி விளக்குக

**XVI. விடையளி (ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும்)** **(1x7=7)**

1. புதிய நம்பிக்கை கதைச்சுருக்கம் தருக
2. பாய்ச்சல் கதைச்சுருக்கம் தருக
3. இராமானுசர் நாடகத்தின் கதைச்சுருக்கம் தருக